# காஞ்ச

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை



# கைதி எண் 6342



## தம்பி!

பாரிஸ், இலண்டன், வாஷிங்டன், டோக்கியோ இப்படிப்பட்ட எழில் நகர்களில், ஐம்பது அடுக்கு மாடிக் கட்டடத்தில் மினுமினுப்பும் வழவழப்பும் உள்ள மெத்தையில் அமர்ந்தபடி, தான் கண்ட காட்சிகளையும், கோலங்களையும், உரையாடிய நண்பர்கள் குறித்தும், களிப்புப்பெற்ற கலைக் கூடங்கள் பற்றியும், வாங்கிவைத்துள்ள பொருள் பற்றியும், வருவதற்கான நாள்பற்றியும், தம்பிக்கு எழுதும் அண்ணன்மார்கள் உண்டு. உனக்கும் ஒரு அண்ணன் இருக்கிறேனே! குறைந்தபட்சம் பினாங்கு, சிங்கப்பூர், கொழும்பு, ஜகார்தா போன்ற இடங்களுக்குச் சென்று அங்கிருந்தாவது கடிதம் எழுத முடிகிறதா! உனக்குக் கிடைத்த அண்ணன் அப்படி! என்ன செய்வது!! சிறையிலிருந்து கொண்டு எழுதுகிறேன். சிறைதானே என்று அலட்சியமாகவும் எண்ணிவிடாதே, தம்பி! மாடிக் கட்டடம்! தனி அறை!! கட்டுக்காவல் சூழ!! கம்பிகள் பதித்த கதவு! காற்றைத் தடுத்திடும் அமைப்பு! இலேசான இடமல்ல!!

மாடிக் கட்டடம்—5ம் நம்பர் அறை — மணி கூட அடிக்கிறது 9.—நவம்பர் 25.

தொலைவிலே உள்ள பொது இடத்துக் கடிகார மணி! கடிகாரங்கள் என்று சொல்லியிருக்க வேண்டும்; ஏனெனில், தொட்டும் தொடர்ந்தும் இரண்டு மூன்று கடிகாரங்களின் மணியோசை கேட்கிறது; ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமானஇசைநயத்துடன். இந்தஇசையை விரட்டும் அளவுகுக, மின்சார இரயில் வண்டிகள் கிளப்பும் ஓசை!!

சென்னை நகரத்து மையத்தில்தானே இருக்கிறேன். நகரத்தையும் நகர மக்களையும் பார்க்க முடியாதே தவிர, நகரம் எழுப்பிடும் நாதத்தைக் கேட்க முடிகிறது — அதிலும் இரவு நேரத்தில் தெளிவாக மினசார ரயில் கிளப்பும் ஒலி, காதிலே விழும்போதெல்லாம், ஒவ்வொரு விதமான பொருளுள்ள சொற்றொடர் நினைவிற்கு வருவதுபோல, ஒரு மனமயக்கம். சிறு வயதுக்காரருக்கு மட்டுந்தான் அப்படி ஒரு மயக்கம் ஏற்படும என்று எண்ணிக்கொண்டிருந்தேன் — வயது ஆனவர்களுக்குந்தான் ஏற்படுகிறது.

5-ம் நம்பர் அறை, எனக்கு ஏற்கனவே பழக்கமான இடம்; ஆமாம் தம்பி! இங்கு நான் இப்போது மூன்றாவது முறையாகத் தங்கி இருக்கிறேன்.

முன்பு தங்கியிருந்தபோது, இந்த மாடிக் கட்டடம் முழுவதும், நமது கழகத் தோழர்கள் நிரம்பி இருந்தனர். பூட்டிவிட்ட பிறகு, அவரவர்கள் தத்தமது அறையிலிருந்தபடியே பேசிக் கொள்வதுண்டு. இம்முறை, நான் மட்டும்தான் இங்கு — நமது தோழர்களை, சிறையில் வேறோர் பகுதியில் வைத்துவிட்டார்கள். என்னுடன் இருப்பவர்கள் இருவர்—ஒரு முஸ்லீம் பெரியவர் — மற்றொருவர் செட்டிநாட்டுக்காரர். இருவரும், அமைதி விரும்புபவர் — என்பால் அன்பு கொண்டவர்கள். அரசியல்பற்றி அதிகமாகப் பேசுபவர்கள் அல்ல —விஷயம் தெரியாதவர்களுமல்ல.

சிறையிலே தம்பி! ஒருவன் எவ்வளவு காலம் நம்மோடு இருக்கப்போகிறவன் என்பதைப் பொருத்தே பெரிதும், பழக்கம் ஏற்படும். சிறை பாஷையிலே “தள்டா! அவன் போயிடுவான் பத்து நாள்லே! நம்ம கதையைச் சொல்லு, கிடக்கணுமே அடுத்த ஆடி வரைக்கும்” என்று கூறுவார்கள்.

என் ‘கதை’ இருக்கிறதே இது எப்படி இருக்கும் என்று எனக்கே தெரியவில்லை! மற்றவர்களுக்கு எப்படித் தெரிய முடியும்!! எத்தனை நாட்களோ! மாதங்களோ! ஆண்டுகளோ! இழுத்துக் கொண்டு வந்தார்கள், பூட்டிவைத்திருக்கிறார்கள். எதற்காகக் கொண்டுவந்தார்கள் என்று சட்ட சபையிலே பேசப்படுகிறது, படித்துப் பார்க்கிறேன்—எனக்குச் சொன்னவர் எவரும் இல்லை.

எதற்காகக் கைதுசெய்கிறார்கள் என்பதைக் கூறவேண்டும், என்று என் நண்பர் வழக்கறிஞர் நாராயணசாமி, உயர்நீதி மன்றத்திலே வாதாடுகிறார். நான் எங்கே போய் வாதாடுவது? நில் என்றார்கள் நின்றேன்! ஏறு! என்றார்கள் ஏறினேன்! இரு! என்றார்கள் இருககிறேன். இன்று எத்தனை நாள்? 16-ந் தேதி பிடித்தார்கள்!

பார்த்தாயா, தம்பி! எனக்கே, போலீஸ் ‘பாஷை’ வந்துவிட்டது — பிடித்தார்கள்!! அந்த அகராதி, எளிதாகப் பழக்கத்துக்கு வந்துவிடுகிறது.

சிலர் என்னைக் கேட்டார்கள்-இங்கு அல்ல- சைதாப்பேட்டை சப்-ஜெயிலில்—மரியாதையாக —“அய்யா பேர்லே என்ன கேஸ் போட்டிருக்

காங்க?'' என்று, என்ன பதில் சொல்வது? இன்னும் ஒண்ணும் போடலீலே—என்றேன். கேஸ் போடாத முன்னயே, ஜெயிலா!!—என்றார்கள். இப்போதும் எனக்குத் தெரியவில்லை—என்பேரில் வழக்கு உண்டா, இல்லையா என்பது. (நவம்பர் - 26-ல் புரிந்தது!)

நவம்பர் 17-ல், சென்னை அறிவகத்திலிருந்து கிளம்பி; திருவல்லிக்கேணி கடற்கரைக்குச் சென்று, அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவைக் கொளுத்துவது என்பது நான் மேற்கொண்ட திட்டம்.

நவம்பர் 17 காலை 9 மணி சுமாருக்கு, நான், திருவல்லிக்கேணி கடற்கரைப் பக்கம் சென்றேன் என்றால், திடுக்கிட்டுப் போவாயல்லவா—ஆனால் உண்மையாகவே, சென்றேன். நடந்து அல்ல! விலையுயர்ந்த மோடாரில்! தனியாக அல்ல! போலீஸ் துணைக் கமிஷனர் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். சிறு தூறல்! என்னை, போலீஸ் கொட்டடியிலிருந்து, அந்த அதிகாரி, அழைத்துக்கொண்டு போகிறார், திருவல்லிக்கேணி கடற்கரைப் பாதையாக, கமிஷனர் அலுவலகத்துக்கு. என்னையுமறியாமல் சிரிப்பு வந்துவிட்டது.

அவசரப்பட்டு நீங்கள் நடவடிக்கை எடுத்துவிட்டீர்கள், ஐயா! மழை பெய்வதைப் பார்த்தால், என் வேலையை, மழையே கெடுத்துவிட்டிருக்கும் போல இருக்கிறதே—என்றேன்.

இந்த இடத்தில் அல்லவா, இன்று மாலை அறப்போர் துவக்கம் நடைபெற்றிருக்க வேண்டும்–தடுத்துவிட்டார்களே என்று எண்ணினேன். ஏக்கமாகத்தான் இருந்தது.

16-ந் தேதி காலை, காஞ்சிபுரத்திலிருந்து, நான், தோழர்கள் பார்த்தசாரதி–பொன்னுவேல்–சுந்தரம்–வெங்கா–ஆகியோருடன், திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக ஜீப்பில் கிளம்பினேன், சென்னைக்கு.

13-ந் தேதியிலிருந்தே காஞ்சிபுரத்தில், பல விதமான வதந்திகள்;-வந்துகொண்டிருக்கிறார்கள்; வந்துவிட்டார்கள்—பிடிக்கப் போகிறார்கள்–வீட்டிலேயே சிறைவைக்கப் போகிறார்கள், என்றெல்லாம்.

சென்னையில் கழகத் தோழர்களைக் கைது செய்த செய்தி, இந்த வதந்திகளுக்கு அதிக வலிவு கொடுத்தது.

காஞ்சிபுரத்தில், நண்பர்கள், நாலைந்து நாட்களாகவே, பரிதாபம் கலந்த முறையில் என்மீது பார்வையைச் செலுத்தத் தொடங்கிவிட்டார்கள். சரி! இங்கு இருந்துகொண்டு, வதந்திகளைப் பெற்றுக்கொண்டிருப்பானேன் — சென்னைக்கே செல்வோம் என்று, 16-ந் தேதி காலை கிளம்பினேன். ஆனால், என்னைப் பொருத்தமட்டில், அன்று கைது செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. 17-ந் தேதி, நிகழ்ச்சியின்போதுதான் 'பிடிப்பார்கள்' என்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

ஜீப், பூவிருந்தவல்லி தாண்டிய உடனே, எதிர்ப்புறம் இருந்து வருகிற மோடார்கள், வேகத்தைக் குறைத்துக்கொண்டு, என்னைப் பார்க்க ஆர்வம் காட்டத் தொடங்கின. எனக்கு, 'வாடை' புரிந்தது.

வேகமாக வந்துகொண்டிருந்த 'லாரி'யை நிறுத்தினர், டிரைவர்; பதைபதைப்புடன்,

"அண்ணே! வளையம் போட்டு கிட்டு இருக்காங்க, அமிஞ்சிகரை கிட்டே.''

என்றார்.

போனால் சிக்கிக்கொள்வானே, போலீஸ் தயாராக இருப்பது இவனுக்குத் தெரியாதே, நாமாவது முன்கூட்டிச் சொல்லிவைப்போம் என்ற எண்ணம், அந்த நல்ல மனம் கொண்டவருக்கு.

"பரவாயில்லை. நடப்பது நடக் கட்டும்.''

என்று நான் பதில் கூறிவிட்டுக் கிளம்பினேன்—எதிர்ப்புறமிருந்து வருகிற லாரிகள்—மோடார்கள் எல்லாமே, இந்தப் 'போலீஸ் வளையம்' பற்றிக் கூறின. ஒரு ஆர்வமுள்ள லாரிக்காரர், என் மனம் மகிழும்படிச் சொன்னார்,

"கவலைப்படாதே அண்ணா! நாங்க இருக்கிறோம் வெளியே''

என்று.

கொடி ஏறிவிட்டது, இனி திருவிழா நடக்கப் போகிறது என்று தெரிந்துவிட்டது. நாவலரும், கருணாநிதியும் நண்பர்களும், மோடாரில் வந்தார்கள், சென்னையிலிருந்து, வழியிலேயே என்னைப் பார்க்க. விவரமாகக் கூறினார்கள், அமைந்தகரை போலீஸ் நிலையத்தருகே, என்னை கைது செய்யத் தயாராக இருப்பதாக! கேட்டுக்கொண்டு, கிளம்பினேன்.

காஞ்சிபுரத்திலிருந்து, அ. க. தங்கவேலர் தமது மோடாரில், வந்துகொண்டிருந்தார். அதிலே, என் மகன் இளங்கோவனுடைய மாமனார், பேரளம் குஞ்சிதபாதம் அவர்களும், நண்பர் இராசகோபாலும் வந்துகொண்டிருந்தனர்.

அமைந்தகரை போலீஸ் நிலையத்தருகே, போலீஸ் வான்கள்! சைகிள்கள்! இருப்புத் தொப்பிப் போலீசார்! அடே அப்பா! ஏழெட்டுக் கொள்ளைகளை நடத்திப் பிடிபடாத ஒருவனைப் பிடிக்க எடுத்துக்கொள்ளப்படும் 'முஸ்தீப்புகள்' போல!! என்ன வீண் சிரமம்!!

அமைந்தகரை போலீஸ் அதிகாரி, பாதையின் நடுவே நின்றார், நில்! என்று கைகாட்டினார்; ஜீப் நின்றது; முன்பக்கம் உட்கார்ந்திருந்திருந்த என் அருகே வந்தார்.

"என்ன? நான் தேவையா?'' என்று கேட்டேன்.

"ஆமாம்'' என்றார்; சிரிந்தமுகத்துடன்.

"நான் மட்டுமா, என்னோடு உள்ள நால்வரும் சேர்த்தா?" என்று கேட்டேன்.

"ஐவரும்!"—என்றார். ஐவர் அணி என்று சொல்லி இருந்திருந்தால் அகமகிழ்ச்சி கொண்டிருந்திருப்பேன்.

கீழே இறங்கினேன் — எதிரே தயாராக இருந்த போலீஸ் வானில் ஏறிக்கொள்ள. ஒரு விநாடி யோசித்துவிட்டு, போலீஸ் அதிகாரி, "ஏன்! ஜீப்பிலேயே போகலாமே. அருகேதான்" என்றார். சரி, என்றேன். என்னுடன், ஜீப்பில் ஏறுவதா கூடாதா என்று அவருக்கு ஐயப்பாடு. "ஏறலாமா? ஏறிக்கொள்வதிலே தவறு இல்லையே?" என்றெல்லாம் கேட்டார் — குழப்பத்துடன். அவ்வளவு அச்சம் ஏற்பட்டுவிடுகிறது அதிகாரிகளுக்கு, கழகத் தோழர்களிடம் எந்தக் காரணத்துக்காகத் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டி நேரிட்டாலும், அதை வைத்துக்கொண்டு எந்தக் காங்கிரஸ்காரர் என்ன கலகமூட்டி என்ன தீங்கு தேடிவிடுவாரோ, என்ற அச்சம்! ஆட்சியில் உள்ளவர்கள் நேர்மையாகத்தான் நடந்துகொள்வார்கள்; வீணான கலகப் பேச்சுக்குக் காது கொடுக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை இப்போது அதிகாரிகளுக்கு இல்லை. நல்ல தமிழில் ஒரு அதிகாரி பேசினாலே, அவர்மீது ஐயப்பாடு ஏற்பட்டுவிடுகிற காலமல்லவா இது. அதனால் தான் போலீஸ் அதிகாரி, என்பக்கத்தில் உட்கார அச்சப்பட்டார். பரவாயில்லை! தவறு இல்லை! என்று நான் பலமுறை கூறியபிறகே, வண்டியில் ஏறினார்.

போலீஸ் நிலையம் சென்று ஜீப் நின்றது; உள்ளே, இரும்புத் தொப்பிக்காரர் ஏராளம்.

ஐவரும் உள்ளே சென்று ஒரு பலகைமீது அமர்ந்தோம்.

அங்கு இருந்த இரும்புத் தொப்பிக்காரர், எங்களைப் பார்த்துக்கொண்டு, நின்றிருந்தனர்—ஒருவரும் பேசவில்லை. எனக்கே என்னமோபோல இருந்தது; ஏதாவது பேசிவைப்போம் என்ற எண்ணத்தில், "நீங்களெல்லாம் ரொம்ப நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டேன். வேடிக்கையான பேச்சு என்றுதான் இதனை யாரும் கருதிக்கொள்வார்கள், ஆனால் பாவம், அந்த போலீஸ்காரர்கள், அதற்குக்கூடப் பதில் கூறவில்லை; கூச்சம், அச்சம்! அருவருப்பும் அல்ல; கோபமும் அல்ல என்பதை அவர்களின் பார்வை விளக்கிக் கொண்டிருந்தது; அவர்கள் பேசாமல் நின்றது, இன்றைய ஆட்சியில், யாராருக்கு அச்சம் பிடித்துக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டிற்று. இதைக் கண்டு நான் வியப்புற்றேன், ஆனால் அடுத்த கணம், வேறோர் வியப்புக் கிளம்பிற்று. என்னுடைய பேரளத்துச் சம்பந்தியை உள்ளே அழைத்துக்கொண்டு வந்தார்கள் அவரும், எங்களோடு வந்தவர், எனவே கைது செய்யப்பட வேண்டியவர் என்ற கருத்தில்! பேரளத்தார் எனக்குச் சம்பந்தியாகி மூன்று மாதம்தான் ஆகிறது. என்னோடு சேர்ந்ததற்காக, அவருக்கும், போலீஸ் கொட்டடியிலே நுழைவு! எனக்கு வியப்பாகவும் இருந்தது, வருத்தமாகக் கூட இருந்தது. என்னென்ன எண்ணிக்கொள்கிறாரோ என்று வேறு, மனதிலே கொந்தளிப்பு, அதிகாரியிடம் விளக்கம் கூறினேன்—அவர் என் உறவினர் — வெளியூர் — கழகத்தாரும் அல்ல; கிளர்ச்சிக்காகவும் வரவில்லை என்றேன். அதிகாரி, "எனக்கு அதெல்லாம் தெரியாது. எங்களுக்குக் காஞ்சிபுரத்திலிருந்து இரண்டு மோடார்களில் கழகத்தார் வருகிறார்கள், என்று தகவல் கிடைத்தது. அதிலே ஒரு மோடாரில் இவர்! எனவே இவரும், கைதுதான். கமிஷனரிடம் விளக்கம் கூறி, விடுவித்துக் கொள்ளுங்கள்" என்றார். அவ்வளவுதான் அவர் கூறமுடியும், நமக்கு உள்ள நிர்வாக முறை, அவ்வளவுக்குத்தான் இடம் அளிக்கிறது. ஏராளமான பொருட் செலவிலே, துப்பறியும் துறை, தகவல் சேகரிக்கும் துறை பணிபுரிகிறது. கழகத் தோழர்கள் எவரெவர்? எவரெவர் கிளர்ச்சியில் ஈடுபடப் போகிறவர்கள்? எப்போது? என்பது அத்தனையும் துரைத்தனம் நன்கு அறியும். நாமும் எல்லாவற்றையும், முன்கூட்டியே தெரிவிக்கிறோம். என்றாலும், போலீஸ் துறையினருக்கென்று அமைந்துவிட்டுள்ள வேலை முறை, உறவினராயினும் விடாதே! உடன்வந்தவர் என்றால், கிளர்ச்சிக்காரராகத்தான் இருப்பார்! என்று கட்டளை பிறப்பிக்கிறது. அதன்படி காரியம் நடக்கிறது. இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு, கமிஷனர் அலுவலகத்திலேதான், பேரளத்தாருக்கு 'விடுதலை' கிடைத்தது. எனக்குச் சம்பந்தி ஆனதற்குக் கிடைத்த சன்மானமா இது என்று எண்ணி எங்கே சங்கடப்படுகிறாரோ என்று நான் எண்ணிக்கொண்டேன். ஆனால், அவர் வருத்தமோ, கலக்கமோ கொள்ளவில்லை. அதைக் கண்டு எனக்கு மிக்க மகிழ்ச்சி. பிறகு சைதாப்பேட்டை சப்-ஜெயிலுக்கும் வந்திருந்தார். அப்போது எனக்கு ஒரு விஷயம் நினைவிற்கு வந்தது, மெத்தச் சிரமப்பட்டு, சிரிப்பை அடக்கிக்கொண்டேன். காஞ்சிபுரத்திலேயே என்னைக் கைது செய்யப்போகிறார்கள் என்று வதந்தி உலவியபோது, என்னுடைய இளைய மருமகள், பேரளத்தாரின் மகள், விஜயா, என் மனைவியிடம், "மாமி! முதலமைச்சர் பக்தவத்சலம் எங்கள் குடும்பத்துக்கு ரொம்பத் தெரிந்தவர், வேண்டியவர், நான் போய் கேட்கட்டுமா அவரை, ஏன் என் மாமனாரைக் கைது செய்ய எண்ணுகிறீர் என்று" எனக் கூறியதாக, ராணி என்னிடம் சொன்ன நினைவு வந்தது. என்னைக் கைது செய்ய வேண்டாமென்று முதலமைச்சர் பக்தவத்சலத்திடம் சிபார்சு செய்ய விரும்பிய விஜயாவுக்கு, பாபம், தன்னுடைய தகப்பனாரையே பக்தவத்சலத்தின் அரசாங்கம் இந்தப் பாடுபடுத்திவிட்டதைக் கேள்விப்பட்டபோது, முகம் எப்படி ஆகி இருந்திருக்கும்! நான்தான் உள்ளே இருந்தேனே, பார்க்க முடியவில்லை; ஆனால் யூகித்துக் கொள்ள முடிகிறதல்லவா!

( 13-பக்கம் பார்க்க )

# மக்களாட்சி

மலர் 1. ] [ ஆசிரியர். சி என். அண்ணாதுரை ] [ இதழ் 9

கேரளத்தில் காங்கிரஸ் அமைச்சரவை கவிழ்ந்தது! சங்கர் தலைமையில் நடைபெற்ற ஆட்சியில் தங்களுக்கு நம்பிக்கையில்லை என்பதைச் சட்ட மன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் எடுத்துக் கூறிவிட்டனர். காங்கிரஸ் உறுப்பினர்களே அந்த மன்றத்தில் பெரும்பான்மையினர். எனினும் சங்கர் அமைச்சரவை அம்மன்றத்தின் நம்பிக்கையை இழந்து கவிழ்ந்துள்ளது. மாற்றுக் கட்சியினரின் அமைச்சரவையைக் கலைத்தபோது காங்கிரஸ் கட்சி களிப்புக் கொண்டது. 'விட்டோமா பாருங்கள்' என்பதுபோல் நடந்துகொண்டது. இன்று காங்கிரஸ் அமைச்சரவையே கவிழ்ந்ததும் காரணம் கண்டுபிடிக்கின்ற வேலையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். யார் யார் எதிர்த்து வேலை செய்தார்கள், வாக்களித்திருக்கிறார்கள் என்று விவரம் சேகரித்து அவர்கள்மீது 'நடவடிக்கை' எடுத்திருக்கிறார்கள். அவர்கள், இவர்கள்மீது நடவடிக்கை எடுத்த பின் இவர்கள் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறார்கள்! யார் யார் எதிர்த்து நின்றார்கள் என்பதைக் கணக்கெடுப்பதைவிட, எதிர்த்து நிற்க எது காரணம் என்று காணவேண்டும். 'எதிர்க்காதீர்கள்' என்று உபதேசம் செய்தால் மட்டும் போதாது. எதிர்ப்பு எழாத வகையில் ஆட்சி அமையவேண்டும். அதை விடுத்து யார் யார் எதிர்த்தார்கள் என்ற புள்ளி விவரம் சேகரித்துப் பயன், இல்லை.

இத்தனைக்கும், இது காமராசர் காலம்! அவர் கடைக்கண் பார்வை பட்டால் போதும், கலகம் அடங்கும், மாச்சரியம் ஆச்சரியமாக நீங்கும், பூசல் தணியும், போர் நிற்கும் என்றெல்லாம் கீர்த்திப் புராணம் வேறு பாடுகின்றார்கள். வேறு கட்சிகளிலே கருத்து மாறுபாடு கடுகளவு காணப்படுமாயினும் அதனை மலையளவாகக் காட்டி, "எங்கள் காங்கிரசைப் பாருங்கள், எவ்வளவு கட்டுக்கோப்பாக இருக்கிறது. இதிலே ஓட்டை இல்லை, விரிசல் கிடையாது. நேருவுக்குப் பின்? என்றார்கள். நாங்கள் எவ்வளவு நேர்மையாக இருக்கிறோம்" என்று கூறுவார்கள். நாங்களே ஆளத்தக்கவர்கள். அதற்கான ஆற்றல் எங்களிடமே உண்டு என்று கூறிப் பெருமைப்படுவர். ஆனால் அந்தக் காங்கிரஸ் கட்சியிலேயே பலர் பிரிந்து, வேறுபட்டு நின்று 'சங்கர் ஆட்சியில் இது இது குறை, இன்னது இன்னது தவறு" என்று எடுத்துச் சொல்லி எதிர்த்து வாக்களித்திருக்கிறார்கள். எவ்வளவு கெட்டிருந்தால் இவ்வளவு வெளியில் வந்திருக்கும்! எத்தனை நாட்கள் மனத்திலேயே கசப்பை மென்று விழுங்கினரோ! விழுங்க விழுங்க மேலும் மேலும் கசப்பு வளர்ந்தது. 'காமராசர் மார்க்' தைலம் கசப்பைப் போக்க முடியவில்லை. அதனால் அவர்கள் 'நம்பிக்கையில்லை' என்று அறிவித்துவிட்டார்கள். அமைச்சரவை கவிழ்ந்தது!!

எதிர்க்கட்சிகள் கூட்டாக ஆட்சி நடத்த முடியாமையை அறிந்த கவர்னர் தாமே ஆட்சியை ஏற்றிருக்கின்றார். காங்கிரஸ் கட்சி எப்போதோ கடையைக் கட்டிக்கொண்டிருக்கும். ஆனால் நம் நாட்டில் எதிர்க்கட்சிகளிடையே ஒன்றுபட்டு நின்றிடும் நிலை இல்லை. பொது எதிரியை-ஆளும் கட்சியை-வீழ்த்த வேண்டும் என்ற வேட்கையைவிட, ஒருவரை ஒருவர் வீழ்த்திக் கொள்வதையே பெரிதென நினைத்துப் போற்றிடும் போக்கினராக உள்ளதால், காங்கிரஸ் இன்னும் கொலுவிருக்க முடிகின்றது.

கேரளத்தில் இன்றுள்ள கவர்னர் ஆட்சியை மக்களாட்சியில் விருப்பம் கொண்ட யாரும் வரவேற்க மாட்டார்கள்; போற்றமாட்டார்கள்; கவர்னர் ஆட்சி நடக்குமானால், தேர்தல்கள் ஒழுங்காக நடக்கும் என்று சிலர் கருதுவர். ஆனால் காங்கிரஸ்காரர்கள் இன்றுள்ள நிலையில், எப்போதும் எதையும் செய்வார்கள். ஒழுங்கும் ஒழுக்கமும் அவர்கள் அறியாதவை. அவர்களுக்கு இன்று முடிவுதான் முக்கியமேயன்றி முறையன்று. எந்த முறையிலாவது தாங்கள் விரும்பிய முடிவு கிடைத்தால் சரி என்று எண்ணிடும் நிலையில் இன்று உள்ளனர். அதனால் கவர்னர் ஆட்சியிலும், காங்கிரஸ் கட்சியினரின் கைவரிசைக்கு இடம் தேடிக்கொள்வார்கள். தேர்தல் நடக்கும்போது தாங்கள் அறிந்த 'கலை'களையெல்லாக் காட்டுவார்கள். எனவே கவர்னர்

ஆட்சி என்பதாலேயே தீமைகள் அற்றுவிடும் என்று எண்ணிட வேண்டியதில்லை.

நல்லதோ கெட்டதோ, சரியோ தவறோ மக்கள் தீர்ப்பே முடிவானது என்ற நிலைதான் மக்களாட்சி முறை. மக்கள், தங்களுக்காகத் தங்களால், தாங்களே ஏற்படுத்திக்கொள்வதே மக்களாட்சி முறை. அந்த முறையில் தேர்தல்களை உடனடியாக நடத்தி, அதில் யார் பெரும்பான்மையினராக வெற்றிபெறுகின்றனரோ அவர்களிடம் ஆட்சியை விடுவதே முறை. அந்த முறையில் கேரளத்தில் உடனடியாகத் தேர்தல்களை நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல், தேர்தலுக்கு உரிய காலம் — ஐந்து திங்கள் கழித்து — வரும்போது தேர்தலை நடத்தலாம் என்று தீர்மானித்திருக்கிறார்கள். இது, தனக்குப் பயன்படாத ஒன்றைத் தட்டிக் கவிழ்த்துக் கொட்டிவிடுகின்ற கதையாகத்தான் ஆகிறது. "ஆண்டால் எங்கள் மந்திரிகள் ஆளுவார்கள்-இல்லையேல் மக்களாட்சியே கிடையாது போங்கள்'' என்று காங்கிரஸ் கூறவில்லையே தவிர நடப்பதெல்லாம் அப்படித்தான் இருக்கிறது.

இது அவர்களுக்கும் நல்லதல்ல — நாட்டுக்கும் நல்லதல்ல.

★

# "பாரதியார்"

"சாதிகள் இல்லையடி பாப்பா''
"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்''

இன்று இந்தக் கருத்துக்களைப் படிக்கும்போதே சிலருக்குக் குமட்டும். ஜாதிகள் இல்லையாமே, என்ன அக்ரமம் இது! ஆண்டவனுக்கு அடுக்குமா? கையிலே ஐந்துவிரல், ஐந்தும் ஐந்துவிதம். அதுமாதிரி மனிதரிலே பலவகை, ஒவ்வொன்றும் ஒருவகை அதான் ஜாதி என்று சிலர் சாதிச் சனியன் பிடித்தாட்ட ஆடுகின்றார்கள். மனிதனை மனிதனாக, தமிழனைத் தமிழனாக மதிக்காமல் சாதியை முன்வைத்து, முக்கியமாக வைத்து— ஒருவர்க்கு ஒருவர் பழகிடுகின்றனர். இன்றே இந்நிலை! அன்று—பல ஆண்டுகளுக்குமுன் ஒரு புலவர் 'சாதிகள் இல்லை' என்று பாடுகின்றார் என்றால் அவருடைய உள்ளம் எவ்வளவு உயர்ந்த கொள்கைகளின் பிறப்பிடமாக விளங்கியது என்பதை அறிந்துகொள்ளலாம். அதேபோல், தமிழின் மேன்மையை எடுத்துச் சொல்வது இன்று மதிப்பான செயல் ஆகிவிட்டது. தமிழ் அறியாதாரும் அறிந்தார்போல் நடிக்கவேண்டிய நாட்கள் ஆகிவிட்டன இப்போது. இன்று சிலர் தமிழ் பற்றித் தக்க உணர்வு கொள்வது இல்லை. இந்த மண்ணில் ஆங்கிலேயரின் ஆட்சி இருந்தபோது அவன் ஆதிக்கத்தோடு மொழியும் தலைமைபெற்றிருந்தது. அப்போது ஒரு புலவர், தான் அறிந்த மொழிகளிலே தமிழ் மிக்க இனிமையானது என்று பாடுகின்றார் என்றால் அவருடைய நெஞ்சத்தில் நிலவிய தமிழ்ப்பற்றை என்னென்பது?

கவிஞர் பாரதியார் எத்தனையோ கருத்துக்களைத் தந்திருக்கிறார். எத்தனையோ வகைகளில் தமிழ் மொழியை வளப்படுத்தியிருக்கின்றார். அவை எல்லாவற்றையும்விட, இவ்விரண்டு கருத்துக்களும் அவருடைய பெயரைத் தமிழ் உள்ளளவும், தமிழ்ச் சமுதாயம் உள்ளளவும் நிலைநிறுத்தக் தக்கவையாகும். சரிநிகர் சமமானதோர் சமுதாயத்தில் மொழிப்பற்று மிக்கு எழுதற்குப் பாரதியாரின் இக்கருத்துக்கள் துணை நிற்கும்.

துடிப்புள்ள நெஞ்சுடையாராகப் பாரதியார் இருந்தமையால் கருத்துக்களில் ஒரு வேகத்தைக் காண்கின்றோம். துப்பாக்கியினின்றும் வெடித்து வெளிவரும் குண்டுகள் போன்று அவர் வாயிலிருந்து சொற்கள் வெடித்து வெளிக்கிளம்புகின்றன. ஒவ்வொரு சொல்லும் தன்னிலே பொருளைப் பொதிந்து கொண்டுள்ளது. வெறும் ஓசை தரும் சொல்லாகவோ, இடம் நிரப்பும் அசையாகவோ அவருடைய சொற்கள் அமையவில்லை, இத்தனைக்கும் அவருடைய பாட்டு எளிமை மிக்கவை. எழுத்துக் கூட்டிப் படிக்கின்ற பக்குவமே உடையவர்களும் பாரதியார் பாட்டைப் படித்துப் பொருள் அறிய முடியும். பாட்டென்பது புலவர்களுக்கு மட்டுமே புரியும் என்ற நிலையை மாற்றிய பெருமகன் அவர், பாட்டுப் பாடுவது பொழுதுபோக்க—என்ற நிலையை மாற்றி—பாட்டு பயன்தர வேண்டும் என்றாக்கிய பண்பாளன் அவர். மழை சுமந்து உலவிடும் மேகம்போல் கருத்துக் கதிர் சுமந்து அமைந்திருப்பவை பாரதியார் பாடல்கள்.

அவருடைய வாழ்வின் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வது நல்லதுதான்; சிலர்க்கும் பயன்தரும் பாடமாக அமையலாம். ஆனால் இன்று தோன்றும் பரிவுணர்ச்சி அவருக்கு எந்த வகையில் பயன் தருவதாக அமையாது. அதைவிட அவர் கூறிய கருத்துக்களை நாடிப் போற்றினோமாயின் நாமும், வளரும் சமுதாயமும் பயன் பெறலாம். அதையே ஒரு கவிஞன் போற்றுவான். "வானத்து அமரன் வந்தான்காண், வந்தது போல் போனான்காண்'' என்று புலம்பவேண்டாம் என்று 'புதுமைப் பித்தன்' சொன்னார். அது புதுமையின்பால் பித்துடைய பாரதியாருக்கும் பொருந்தும்.

அவருடைய நினைவைப் போற்றும் நாளில் நெஞ்சின் நினைப்பையும் போற்றுவோம்.

# விதை முட்டை

ஒரு நாள் மாலை ஒரு மலை அடிவாரத்தில் சில குழந்தைகள் ஒரு கோழி முட்டை போன்ற பொருளைக் கண்டெடுத்தனர். அதன் நடுவில் தானிய வித்துக்களுக்கு இருப்பதுபோல் ஒரு அழகான கீறல் இருந்தது. ஒரு வழிப்போக்கன் நாலணாக் கொடுத்து அதைக் குழந்தைகளிடமிருந்து வாங்கிக் கொண்டான். அவ்வூர் அரசனிடம் அவ்வதிசயமான பொருளை ஒரு பெருந் தொகைக்கு விற்றான்.

அரசன் தன் நாட்டுப் பண்டிதர்களையெல்லாம் வரவழைத்தார்; அவ்வபூர்வப் பொருள் தானியமா? அல்லது முட்டையா? என்பதை நிர்ணயிக்கும்படி கேட்டுக்கொண்டார். பண்டிதர்கள் கூடிக்கூடி யோசித்தார்கள்; திரும்பத் திரும்ப ஆராய்ச்சி செய்தார்கள் — என்ன செய்தும் உண்மை விளங்கவில்லை.

கடைசியில் அதை ஓர் மாடத்தில் போட்டுவிட்டுப் பண்டிதர்கள் போய்விட்டனர்; ஒரு பெட்டைக் கோழி வந்து அதைக் கொத்திக் கொத்தி ஒரு சிறிய துவாரம் உண்டாகிவிட்டது. அந்தத் துவாரத்தின் வழியாக உள்ளே பார்த்ததில் அது ஓர் தானியமே என்பது வெளியாயிற்று.

அரசனுக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று; பண்டிதர்களைப் பார்த்து இந்தமாதிரி தான்யம் எப்போது, எவ்விடத்தில் பயிர் செய்யப்பட்டது என்பதைக் கண்டுபிடிக்கும்படி உத்தரவிட்டார். பண்டிதர்கள் ஆலோசித்தார்கள், வாதித்தார்கள், புத்தகங்களையெல்லாம் புரட்டிப் பார்த்தார்கள்—பயன்படவில்லை, கடைசியாக அரசனிடம் வந்து "அரசே! எங்களுக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை, ஏனெனில், எங்கள் புத்தகங்களில் இந்தமாதிரியான தான்யத்தைப்பற்றி ஒரு வார்த்தை கூடக் கிடையாது. நமது நாட்டுக் கிழக்குடியானவர்கள் யாரையாவது விசாரித்தால் ஒருவேளை அவர்களுள் யாருக்காவது இதைப் பற்றித் தெரிந்திருக்கலாம்" என்று கூறிவிட்டார்கள்.

ஆகவே தன் நாட்டிலுள்ள மிகவும் வயதான கிழத் தாத்தாவைக் கண்டு பிடித்துக்கொண்டு வரும்படி அரசன் கட்டளையிட்டார். அத்தகைய கிழவர் ஒருவரைத் தேடிப் பிடித்து அரசன் முன் கொண்டு வந்து நிறுத்தினர். அவர் தோலெல்லாம் சுருங்கிப்போன தொண்டுக் கிழம்; பல்லே சுத்தமாய்க் கிடையாது; இரண்டு கவைக் கோல்களை ஆதாரமாகக்கொண்டு அவர் நடந்து வந்தார்.

**டால்ஸ்டாய்**

அவ்விதையை அவருக்குக் காண்பித்தனர்; அவருக்கும் அது ஓர் ஆச்சரிய பொருளாய்த்தான் தென்பட்டது; அதுமாதிரி தான்யத்தை அவர் அதுவரையில் பார்த்ததேயில்லை. போதாக் குறைக்கு கண் வேறு கொஞ்சம் குருடு; கண்ணால் பாதியும் கையால் பாதியுமாக அவர் அத்தான்யத்தை ஆராய்ந்து பார்த்தார். அரசன் கேட்டார் :-

"ஓய்! பெரியவரே! இம்மாதிரி விதை எங்கு விளைகிறதென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் எப்போதாவது இத்தகைய விதையை விதைத்ததுண்டா? அல்லது யாரிடமாவது விலைக்குவாங்கினதுண்டா?"

அந்தக் கிழவருக்குக் காதும் கொஞ்சம் மந்தம்; ஆகவே வெகு நேரம் கத்தின பிறகுதான் அவரிடமிருந்து பதில்பெற முடிந்தது, அவர் சொன்னார்: "எனக்கும் வயது தொண்ணூறு ஆகிவிட்டது; என்றாலும் என் வாழ்நாளில் ஒரு தடவை கூட இவ்வளவு பெரிய விதையை நான் விதைத்ததுமில்லை; அறுவடை செய்ததுமில்லை; விலைக்கு வாங்கினதும் கிடையாது. ஆனால் என்னுடைய தகப்பனார் நல்ல உலகனுபவம் உடையவர்; அவருக்கு ஒருவேளை இவ்விஷயம் தெரிந்திருக்கலாம்"

ஆகவே அரசன் இக்கிழவனின் தந்தைக்குச் சொல்லி அனுப்பினார்; அவரும் வந்து சேர்ந்தார். அவர் ஒரேயொரு கவைக்கோலை மட்டுமே ஆதாரமாய்ப் பிடித்திருந்தார்; அவரது கண்களும் தெளிவாயிருந்தன. அவர் கையில் அவ்விதையைக் கொடுத்தார்கள். அரசன் தன் பழைய கேள்வியை ஒப்பித்தார்.

"ஓய் பெரியவரே! இம்மாதிரி விதை எங்கு விளைகின்றதென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் எப்போதாவது இத்தகைய விதையை விதைத்ததுண்டா? அல்லது யாரிடமாவது விலைக்கு வாங்கினதுண்டா?"

இவருக்கும் காது கொஞ்சம் அப்படி இப்படித்தான்; எனினும் பிள்ளைக்குத் தகப்பன் பதினாயிரமடங்கு தேவலை.

"இல்லை; என் வாழ்நாளில் ஒரு தடவைகூட நான் இவ்வளவு பெரிய விதையை விதைத்ததுமில்லை, அறுவடை செய்ததுமில்லை, விலைக்கு வாங்கினதும் கிடையாது. ஏனெனில் என் காலத்தில் வியாபாரத்தில்

பணப் புழக்கம் ஆரம்பிக்கவில்லை; அவனவனுக்குத் தேவையான அளவு அவனவன் பயிர் செய்து கொள்வான்; மற்றப் பொருள்களை யாவரும் பங்கிட்டுக்கொண்டு அனுபவிப்போம். எங்கள் காலத்தில் இப்போதைக் காட்டிலும் தான்யங்கள் பெரியவையாயும், சத்துள்ளவையாயும் இருந்தன. என்றாலும் இவ்வளவு பெரிய விதையை நான் இதுவரையில் பார்த்ததில்லை. எங்கள் தகப்பனார்தான் அடிக்கடி சொல்லுவார்; தங்கள் காலத்தில் எங்கள் காலத்தைக் காட்டிலும் தானியங்கள் மிகமிகப் பெரிதாயும், சத்துள்ளதாயும் இருந்தனவாம். ஒருவேளை அவர் வேண்டுமென்றால் இதைப்பற்றி ஏதாவது தெரிவிக்கக் கூடும்" என்று கிழவனின் தகப்பனார் பதிலளித்தார்.

அவருடைய தகப்பனாருக்கும் சொல்லியனுப்பப்பட்டது; அவரும் வந்து சேர்ந்தார். அவர் கவைக்கோல்களின் ஆதாரமில்லாமலே நடந்துவந்தார்; உடலில் தசைகளெல்லாம் திரட்சி பெற்றுத் தளதளப்பாயிருந்தன; கூர்மையான பார்வை, தெளிவான பேச்சு. அவ்வபூர்வ விதை அவருக்கும் காட்டப்பட்டது.

"ஆ! இந்த மாதிரி விதையைப் பார்த்து ரொம்ப நாளாய்விட்டது" என்று சொல்லிக்கொண்டே அவர் ஒரு சிறு முனையைக் கிள்ளி, அதை மென்று பார்த்தார். "அதேதான் இது. சந்தேகமில்லை" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

"ஓய் பெரியவரே? இந்த மாதிரி விதை எங்கு, எப்பொழுது பயிரிடப்பட்டது? நீங்களே விதைத்தண்டா? அல்லது யாரிடமாவது விலைக்கு வாங்கினதுண்டா?" என்றார் அரசர்.

"எங்கள் காலத்தில் இந்த விதைதான் எங்கும் எல்லோராலும் பயிரிடப்பட்டது. இந்தமாதிரியானதான்யத்தால்தான் நானும் எனது குடும்பமும் வளர்ந்தது. நானே என் சொந்தநிலத்தில் இவற்றை விதைத்தும், அறுவடை பண்ணியுமிருக்கிறேன்" என்று தாத்தாவுக்குத் தாத்தாவாகிய அக்கிழவர் பதில் சொன்னார்.

திரும்பவும் அரசர் கேட்டார்:-

"தங்கள் காலத்தில் இத்தகைய விதையை யாராவது விற்பனை செய்வதுண்டா? அல்லது விலைக்கு வாங்குவதுண்டா?"

"எங்கள் காலத்தில் தான்யங்களை விற்பதோ விலைக்கு வாங்குவதோ பெரும் பாவங்களாகக் கருதப்பட்டன; அந்தக் காலத்தில் பணம் கிடையாது; அதன் கேடுகளும் கிடையாது. ஒவ்வொருவனும் அவனவனுக்குத் தேவையான தான்யத்தை அவனவன் பயிரிட்டு உபயோகித்து வந்தான்" என்று கிழவர் கூறினார்.

"தாங்கள் எவ்விடத்தில் இம்மாதிரி விதையைப் பயிர் செய்தீர்கள்? உங்கள் நிலம் எங்கிருக்கிறது?"

கிழவன் சொல்லுகிறான்:—

"நிலமெல்லாம் கடவுளுக்குச் சொந்தம். எங்கு நான் உழுகிறேனோ அங்குதான் என் வயலுண்டு. பூமி எல்லோருக்கும்பொது; என் வயல் உன் வயல் என்ற கதையெல்லாம் அப்போது கிடையாது. ஒருவனுக்கு அவனுடைய உழைப்பின் பயன்தான் சொந்தமானது; நிலம் சொந்தமில்லை."

அரசர் ஆச்சரியத்தோடு கேட்டார்.

"பெரியவரே! ஒரு காலத்தில் சாதாரணமாக விளைந்து வந்த இந்த விதை இப்போது ஏன் விளைவதில்லை? தவிர, உம்முடைய பேரன் இரண்டு கவைக்கோலின் ஆதரவின் மேல் நடக்கிறான்; உம்முடைய மகனுக்கு ஒரு கவைக்கோல் போதுமாயிருக்கிறது; தாங்களோ நல்ல இளைஞனைப்போல் நேராக நிமிர்ந்து நடக்கிறீர்கள்; உங்கள் கண் பார்வை மங்கவில்லை; பற்களின் வலிமை குறையவில்லை; பேச்சுத் தடுமாறவில்லை; இந்த இரண்டுக்கும் காரணமென்ன? தயவுசெய்து தெரிவிக்க வேண்டும்."

பெரியவர் சொல்லுகிறார்:—

"அரசே; மனிதர்கள் தங்கள் சொந்த உழைப்பில் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள்; அயலார்சொத்துக்கு ஆசைப்படுகிறார்கள். எங்கள் காலத்தில் அப்படியில்லை. கடவுளின் நீதிப்படி மக்கள் அக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். தங்களுக்குத் தாங்களே தலைவர்களாயிருந்தனர்; பிறர் தலையில் கைவைக்க அவர்கள் விரும்பவில்லை. காரணம் இதுதான்."

✽

**அண்ணாவின்**
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம் ரூ. 1-50
அரசாண்ட ஆண்டி ரூ. 1-50
மதுரைக்கு டிக்கெட் இல்லை ரூ. 2-00

கிடைக்குமிடம்:
**பரிமளம் பதிப்பகம்**
சின்ன காஞ்சிபுரம்.

# வரவு-செலவு

**அண்ணாதுரை**

“ஹலோ! யாரு......ஓ! நமஸ்காரம், ஆமா, நான்தான், நந்தகோபால் தாங்க,......வணக்கம், வணக்கம்...அது எத்தனை நாளா, உங்களுக்கு இந்த வழக்கம்.....இது தாங்க, வணக்கம், ஆமா,...பெரியவங்க சொன்னது நமஸ்காரம்...... என்னங்க...அதுசரி, அதுசரி...... எத்தனையோ மாறுதல்......சும்மா சொன்னேங்க, எனக்கும் தமிழ்னா பிரியம்தான்......நான் மட்டும் தமிழனில்லையா...ரொம்பச்சரி....ஒண்ணுமில்லிங்க, நம்ம அரிசி,......அது தாங்க, நாம சப்ளை செய்ற அரிசி... ஆமா......வருஷம் பத்து ஆகுதுங்களே...நாமதான் வழக்கமா, காண்ட்ராக்ட்...அதுதாங்க......நம்ம அரிசி என்னமோ புழுத்துப்போனது, கெட்டுப்போனது, வயத்துக்கு ஆகாது, கெடுதலு என்றெல்லாம் என்னதுங்க.. அதைத்தாங்க சொல்றேன்...அதற்காக இருக்கிற அதிகாரி......கேள்விதானுங்க, பெரிய டாக்டருன்னு......அவருதான், நம்ம அரிசியைப்பத்தி, குறை சொன்னதாகக் கேள்விப்பட்டேன்......என்னங்க......ரிப்போர்ட்டா?......எழுதி அனுப்பியிருக்கிறாரா.....உங்களிடம் தானே வந்திருக்குது...என்னங்க? ரொம்பக் கண்டிப்பான ரிபோர்ட்டா...இருக்குமுங்க, சிலபேர் சுபாவம் அப்படி......ஐயோ! உங்க பேர்லே வருத்தம் கிடையாதுங்க......சேச்சேச்சே உங்களோட குணாதிசயம் எனக்குத் தெரியாதா...அந்த டாக்டருடைய ‘ரிபோர்ட்’ வெறும் புத்தகப் படிப்புங்க...உலக விவகாரம், அனுபவம், மனஷாளோட தராதரம் இதெல்லாம் தெரியவேணும்பாருங்க ,,,சும்மா படித்துவிட்டு, உத்யோகத்துக்கு வந்துவிட்டா மட்டும் போதுங்களா...என்னங்க?...என்ன? என்ன சொல்றிங்க?.......இருக்கலாமுங்க, காண்ட்ராக்டை...? ஒத்துக்கொள்ள கூடாதுன்னா...? இவரு சொல்றாரா? .........கண்டிப்பாகவா? சொல்லுவாருங்க...நான் சொல்றேன் கேளுங்க...இந்தக் காண்ட்ராக்ட்டுத் தொகை எனக்கொண்ணும் பிரமாதம் இல்லிங்க...முப்பது நாற்பது இருக்கும் ..இலட்சம் பத்து இலட்சமில்லாங்க...ஏதோ பகவான் என்னை ஒண்ணும் பஞ்சை பராரியா வைத்தில்லை...இந்தக் காண்ட்ராக்ட் அடிபட்டுப் போறதாலே எனக்கு ஒண்ணும் குடிமுழுகிப் போய்விடாதுங்க ...எனக்குப் பணத்தைப்பத்தி அல்லங்க வருத்தம், இத்தனை காலமாக எனக்கு இருக்கிற நல்ல பேரைக் கெடுக்க ஒருத்தர் துணியறதுன்னா, மனது கேக்கலிங்க...என்னதுங்க? ஆயிரம் ரூபா சம்பளமா? இருக்கட்டும்ங்க...உத்யோகஸ்தர்தானுங்களே நானும் பல பேர் வழிகளைப் பார்த்ததில்லையா......ஏன் உங்களுக்கே தெரியாதா ... நியாயமான தீர்ப்பு வேணும்ங்க ... உங்களாலே முடியும்...நீங்க ஒரு வரியிலே, ரிப்போர்ட் சரியில்லைன்னு எழுத முடியும்...உங்களுடைய திறமை எனக்குத் தெரியாதா...ஒரு தொல்லையும் வராதுங்க...எப்படிப் பார்த்தாலும், அவரு, ரிப்போர்ட் செய்ய வேண்டியவர்தான். அதை ஏற்றுக் கொள்றதும் தள்ளிவிடறதும், உங்க பொறுப்பு...மேலே போவாரா......? எவ்வளவு மேலே போவாரு...மந்திரிக்கு மேலேகூட எதாவது ஒரு இடம் கண்டுபிடிக்கப் போறாரா, அந்தக்கத்துக்குட்டி ஆபீசர்.. எல்லா மந்திரிகளுமே வேண்டியவங்கதான் ...இந்த இலாகா யாரிடமுங்க...ஓ! அவரிடந்தானா...ரொம்ப நல்லதாப் போச்சிங்க...நீங்க, அந்த ரிபோர்ட்டைத் தூக்கிப் போடுங்க... அடுத்த வெள்ளி, நம்ம அமிர்தாலயத்திலே, அதே மந்திரிதானுங்க, நம்ம படத்தைத் திறந்துவைக்கப் போறாரு... அதென்னங்க அப்படிக் கேட்கறீங்க......அவருடைய குடும்பமும் எங்க குடும்பமும் ஒருவிதத்திலே சம்பந்திகளாச்சே...உங்களுக்கு மட்டுமா, ரொம்பப் பேருக்குத் தெரியாது...நம்ம வீட்டிலேதான் விருந்து ...எதோ ஒரு ஆயிரம் பேருக்காவது இருக்கும்...அது இல்லாமலா,...... நாட்டியந்தான் ... மாலாதாங்க...: கூச்சம் எதுக்குங்க, கட்டாயம் வரணும்... அவரு ரொம்ப நல்லவருங்க ...மந்திரியைத்தான் சொல்றேன்... சிலபேர் போல, அதிகாரிகள்னா மட்டம்னு எண்ணிக்கொள்ளக் கூடியவர் இல்லை...நான் உங்களை அறிமுகப்படுத்தறேன்...இப்படி பின்னாலேயே ஒதுங்கி ஒதுங்கி இருக்கப் படாதுங்க—முன்னுக்கு வர வேண்டியவரில்லையா நீங்க—புகழ்ச்சி இல்லிங்க, சத்யமான பேச்சு...கட்டாயம் வாங்க...கார் அனுப்பிவைக்கட்டுமா...வேணாமா ... அடே அப்பா! ரொம்பப் பயந்தவருங்க நீங்க...... சரி, டாக்சியிலேயே வந்துவிடுங்க ...... என்னதுங்க? ரிபோர்ட்டை என்ன காரணம் காட்டித் தள்ற

துன்னு யோசனே...இது ஒரு பேச்
சாகுமா......முக்கியமான காரணம்
இநக்குதுங்க ...... அதுக்கென்ன.
பத்து டாக்டர்களோட 'சிபாரிசு'
வாங்கித் தாரேன், நம்ம அரிசிக்கு...
உங்களிடம் சொல்லிவைக்கறேன்,
மனசோட போட்டு வையுங்க, அந்த
ஆபீசர் ஏன் அப்படி எழுதிஞருன்னு
புரியுநா உங்களுச்கு......அதுதான்
தப்பு என்கிறேன், நீங்க வெளுத்த
தெல்லாம் பாலுன்னு நம்பிவிட
றிங்க......இருக்கலாம்ங்க, பல வரு
ஷமா அவரு உங்களுக்குத் தெரிங்
திருக்கலாம்,.........மனஷன் உள்
ஆழக்காரருங்க, இதைக் கேளுங்க,
என்னேட தேர்தலிலே போட்டி
போட்டாரே ... ஆமா தோற்காம...
......தோற்றுப்போன தொரைசாமி
யைத்தான் சொல்றேன், யாரு
அந்தத் தொரைசாமி......அதான்
சூட்சமம்னு சொல்றேன்......சொல்
லுங்க பார்க்கலாம்.........எப்படித்
தெரியும் உங்களுக்கு......தொரை
சாமி, இந்த ஆபீசருக்குச் சின்ன
மாமனு'ரு......ஆமா......இப்பப்புரி
யுமா 'ரிபோர்ட்' ஏன் அப்படி
இருக்குதுன்னு.......என்னங்க......
இதையா?.........உங்க 'நோட்'லே
சேர்க்கணுமா? ஏனுங்க பாவம்,
அந்த ஆபீசர்பாடு ஆபத்தாயிடுமே
......என்ன சொல்றிங்க?......உங்
களுக்கு நல்லதா......ரிபோர்ட்டை
உண்மையானதாகக்கொள்ள முடி
யாது என்பதற்குத் தகுந்த கார
ணம்னு, தோணுதா...சரி......உங்க
ளுக்கு யுக்தம்னு பட்டா, தகவலே,
உங்க உத்திரவு விளக்கத்திலே
சேர்த்துக்கொள்ளுங்க......எனக்கு
ஆட்சேபனே இல்லே...மந்திரியிடமா
இந்தச் சின்ன விஷயத்தைச்
சொன்னு சிரிப்பாருங்க......இது
கேவலம் முப்பது நாற்பது ரூபா
விவகாரம்......பேர் கெடக்கூடாது
என்பதற்குத்தான்......ரொம்ப நன்
றிங்க......சப்ளேயை ஆரம்பித்து
விடலாமோல்லே...எல்லாம் தயாரா
இருக்குதுங்க......இதை எல்லாமா
எனக்குக் கவனப்படுத்தணும் நீங்க
...அதெல்லாம் அனுப்ப வேண்டிய
முறைப்படி அனுப்புவேன்...ஆண்ட
வன் தயவுலெ ஒரு குறையும் இல்
லிங்க...தம்பியா......அவன் ஏதோ
வியாபார வேலேயா சுத்திகிட்டு
இருக்கருன்...போன மாதம்...கேட்
டானே, ரொம்ப விசாரித்தான்......
எப்பவும் உங்களேப்பத்தி விசாரிப்
பான்...சொல்றேன்...கட்டாயமா...
வரட்டும்ங்களா....,வணக்கம்ங்க....
வணக்கம்.

◘

"நந்தகோபால் ... ஆமாம் ...
மானேஜர்தானே......குரல் கம்மின
மாதிரியா இருந்துது......தம்பிதான்
பேசச் சொன்னுன்...சொன்னேன்
எனக்கு இருக்கற வேலேத் தொந்தர
விலே இதுக்கு எப்படி நேரம் கிடைக்
கும்னு, விட்டாத்தானே...அதானே,
உங்களுக்குத்தான் தெரியுமே அவ
னேட சுபாவம்...ஆமாமாம் அவச
ரம், அவசரம்; அவசரம், எதையும்
ஆர அமர யோசிக்கிற வழக்கம்
கிடையாது......என்னமோ போங்க
நீங்கத்தான் மெச்சிக் கொள்ள
வேணும்...என்னங்க' கிடங்கா?...
கிடங்கு கிடைக்கறதிலே சிரமம்
என்னங்க...எதோ நீங்க சொல்ற
படி, கடைவீதியிலே என் வார்த்
தைக்கு கொஞ்சம் மதிப்பு இருக்கத்
தான் செய்யுது ... பிரமாதமான
இடம்ங்க...ஆமா, மாடிக் கட்டடம்
தான்...செச்சே! நமக்கு அதை
வாங்கற யோசனே கிடையாதுங்க
...ஆமாங்க ஒரு பன்னெண்டு
கொடுத்திருக்கறேன்......கஷ்டம்னு
வந்தா, எப்படி தாட்சணியமில்லாம
இருக்க முடியுது...பழமொழி இருக்
குதுங்களே பெரியவங்க சொன்
னது தாட்சணியம் தனநாசம்னு...
ஏதோ பெரியவர்களோட ஆசீர்
வாதம்.........அதைத்தாங்கசொல்
றேன், தம்பி அவசரப்பட்டவன், உங்
களிடம் பேசும்போது, கால் ரூபா
கமிஷனுக்கு ஒத்துக்கொண்டு வந்து
விட்டான்......இருக்குமுங்க, நீங்க
என்ன இலேசானவரா...ஒரணுவிலே
இருந்து ஆரம்பித்திருப்பிங்க.........
இதைக் கேளுங்க, கால்ரூபா கமி
ஷன் கட்டுப்படியாகாதுன்னு......
கணக்குப் போட்டுப் பார்த்த பிறகு
தான் சொல்ருன்......நானும் பார்த்
தேனுங்க, வீண் வேலேயாத்தான்
எனக்கும் தோணுது.........இருக்க
லாம்ங்க, தமிழ்நாடு முழுதும் என்
னங்க, மலபாரும் கூடச்சேர்த்துப்
பார்த்தாக்கூட, கால்ரூபா கமி
ஷன்னு, கட்டிவராதுங்க...மத்தவங்
களாலே முடியும்ங்க......விளம்பரம்
செய்யமாட்டாங்க, வித்தவரையிலே
போதும்னு இருப்பாங்க, நாங்க அப்
படி இருக்கமுடியாது பாருங்க......
பேரு இருக்குதுங்க ஆனு அதைக்
காப்பத்திக்கொள்ள வேணுமா......
அதைத்தான் சொல்றேன் செலவு
நிறையச் செய்யவேண்டிவரும்......
என்ன அப்படிப் பிரமாதமான வியா
பாரமாகிவிடப்போகுது....நூற்றுக்கு
அறுவது எழுவதுபேருக்கா வயத்து
வலி வரும்...மருந்து தானுங்களே,
......நோய் பரவணும்னு பிரார்த்தனே
செய்யறது தர்மமில்லா பாருங்க...
டானிக்கா.........இருக்கலாம் ஆனு
முக்கியமா, வயத்துக் கடுப்புக்குத்

அறிஞர் அண்ணுவின் 56ம் ஆண்டு பிறந்த நாள் விழா
கழக தோழர்களுக்கு! ஓர் இனிப்பானச் செய்தி!
எமது இதயக்காணிக்கையாக அறிவுலக மேதையின்
"திரு உருவப் படம்" [கலரில் 20"×14" அளவில்]
மக்கள் உள்ளத்திலுள்ள அறிஞரை! இல்லத்தில் வைத்து மகிழ!
உயரிய! ஒப்பற்ற!! உன்னத வண்ண ஓவியம்!!!
மலிவான விலையில் குறைவான பிரதிகளே தயாராகியுள்ளது
முந்துங்கள் ... விழாக்கூட்டங்கள், ஊர்வலத்திலும் கிடைக்கும்
அறிஞரின் வயதும் 56. உருவப்படத்தின் விலையும் 56 காசு
விபரங்களுக்கு: ஆர். டி. அரசு,
14. மீரான் சாயபுத்தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-2.

தானே அது நல்லமருந்து...அதைத்
தான் சொல்றேன், நல்லபடி விளம்
பரம் செய்தாகணும், செலவு ஆகும்
நிறையன்னு......என்ன அனுப்பு
விங்க, விளம்பரம்......அது எந்த
மூலைக்குப்போதும்?......எங்க
முறையே வேறே...ஒரு சந்தை ஒரு
திருவிழா ஒரு மகாநாடு பாக்கி விடு
வமா.....கட்டாதுங்க......பிடிவாதம்
பேசலிங்க உள்ளநிலைமையைச்
சொல்றேன்...... ..பேச்சைமாத்தற
பழக்கமே கிடையாதுங்க;
தம்பி அவசரத்திலே எடுத்துகிட்
டான், என்னுடை சம்மதம் பெற்ற
பிறகுதானுங்களே ஏற்பாடு சட்டப்
படி செல்லும்...ஆமாமாம் விலாசம்
அவன்பேர்லே இருந்தாலும், எனக்
கும் பங்கு உண்டு, இது நாலு தலை
முறையாஏககுடும்பம்..அதுங்களா,
அது இந்த நிலச்சட்டத்துக்காக
ஒரு ஏற்பாடு பாகம் பிரித்தமாதிரி...
ஆமாங்க,.......நல்லவர்களோட
தொடர்புக்காகத்தான் நான் இவ்
வளவுதூரம் பேசறது...என்னதுங்க
ஒரு அணு கூட்டித் தர்ரிங்களா
...இதோ பாருங்க, இரண்டு பேருக்
கும் பொதுவா, ஆறணு போட்டுக்
கொடுங்க...ஒரு அநியாயமும்
இல்லை...நீங்க பிறகு பாருங்க......
ஆறணு......நாளைக்கே வந்து கை
எழுத்துப் போடுவான்.....வந்துங்க,
முதல் விளம்பரம் உங்களுடையது
தம்பி காட்டினுன்......அதுதானுங்க
ஒரு ஆள் வயத்தை அழுத்திப்
பிடிச்சிக்கிட்டு வேதனைபடுகிற மாதி
ரியா ஒரு படம், பிறகு அவனே சந்
தோஷமா இருக்கறமாதிரி படம்...
படம் எழுதினவருக்கா ஐநூறு
ரூபா...பாருங்க இதுக்கு அள்ளிக்
கொடுக்கறிங்க, உங்க சரக்கை
ஊரெல்லாம் கூவிக்கூவி விற்று
பணத்தைக் கொண்டுவந்து குவிக்
கிற ஏஜெண்டுக்கு ஆறணு
கொடுக்க அரைமணி நேரமாக
வாதாடறிங்க......விளம்பரம் நல்லா
தான் இருக்குது ஆனு, கண்டகண்ட
அரிசி தின்பதால் வயத்துக்கடுப்பு
என்று கொட்டை எழுத்திலே
இருச்குதுங்க, அது சரியில்லிங்க...
உண்மையுமில்லா......அதுக்காகச்

சொல்லலிங்க...நாங்க அரிசி வியா
பாரம் செய்கிறவங்கன்னு எல்லோ
ருக்கும் தெரியும் ஆமாங்க, காலேஜ்
ஆஸ்பத்திரி, ஜெயில், எல்லா இடத்
துக்கும் நம்ம சப்ளை தான்......பல
வருஷமா நடக்குது இருந்தாலும்
அரிசிச் சாதத்தாலே வயத்துக்
கடுப்பு வருவதா சொன்னு, ஊர்
ஒத்துக் கொள்ளாதுங்க...இருக்க
லாமுங்க......நாம ஜனங்களோட
போக்கு தெரிஞ்சி நடக்கணுமில்
லையா அதனுலே......விளம்பரத்தை
மாத்தணும்......படம் இருக்கலாம்,
படம் தேவைதான்; ஆனு கண்ட
கண்ட அரிசி என்பதை மாத்தி
விட்டு, கலப்பட எண்ணெயால்
கடுப்புநோய் வருகிறது என்று
போட்டுவிட்டா, பிரமாதமா இருக்
கும்...கலப்பட எண்ணெய் விஷயத்
திலே சர்க்கார்கூட கண்டிப்பு......
ஆமா...மாத்தின பிறகு, விளம்பரத்
தாளை அனுப்புங்க...இனி எங்க
ளுக்கு அக்கரை இல்லாம போகுமா
...ஆரம்பமே பிரமாதம்னு சொல்லப்
போறிங்க பாருங்க......நீங்க எதிர்
பார்த்தே இருக்கமாட்டிங்க...திறப்பு
விழா நடத்த யாரு வரப்போறது
தெரியுமா ... அடுத்த வெள்ளிக்
கிழமைதான் ... ஆமா; நீங்களே
சொல்லுங்க பார்க்கலாம், கலெக்ட
ரைக் கொண்டு வரவா, இல்லே
ஜட்ஜா வேணுமா......சொல்லுங்க
உங்க ஆசையை......எப்படிப்பட்ட
வங்களுக்கு ஏஜண்ட் கொடுத்திருக்
கிறோம்னு இப்பவாவது தெரிந்து
கொள்ளுங்க, நம்ம புதிய கிடங்கு
திறப்பு விழா நடத்த மந்திரி வரப்
போகிறார் ஐயா! மந்திரி...ஆமா...
ஏன்!ஒத்துக்கொள்வாரான்னு யோச
னையா? நம்ம படத்தை அவர்தான்
திறந்துவைக்கப் போருரு, நம்ம
கிடங்கு திறப்பு விழாவும் அவர்தான்
......அடுத்த வெள்ளி......அழைப்
பிதழ்லே உங்க பேர்தான் முதல்லே
இரண்டாவதுதான், தம்பி பேரு...
நம்ம பேரா? சேச்சே! வேண்டாம்ங்க
தம்பி பேரே போதும்......விருந்து,
நாட்டியம், எல்லாந்தான்......பார்த்
திங்களா, ஆரம்பச் செலவே, எப்ப
டின்னு......கம்பெனி மோடார்கள்

இருக்குதேல்லோ......சரி சரி, ஒரு
இரண்டு அனுப்பிவிடுங்க, காலையி
லேயே...நீங்க, வாங்க தவறாம...
குடும்பத்தோட...நான் சொன்னது
போல, கலப்பட எண்ணெயால்
கடுப்பு வியாதி என்று விளம்பரம்...
மூணு கலரா...ரொம்பச் சரி...வரட்
டும்ங்களா...வணக்கம்.

◙

"அய்யோவ் பாலு மொதலி
...பாலு ஏன், குரல் தெரியலியா...
ஆமா, வந்துது, பார்த்தேன், அத
னுலேதான் கூப்பிட்டேன்......உன்
னுடை அச்சாபீஸ்தானே, அதை
நீயேதான் புகழ்ந்துகொள்ளணும்
...ஏன்யா, நான்தான் கேட்கறேன்,
தர்மகாரியம், கட்டாயம் உதவி
செய்யணும்னு கெஞ்சிக் கூத்தாடி,
ஒரு பச்சை நோட்டை வாங்கிக்
கொடுத்தயே.........நீ எடுத்துகிட்
டேன்னு சொல்றேன், கேள்யா......
பார்த்துட்டுத்தான்யா கேட்கறேன்,
போட்டிருக்கறே, முதல் வரிசை
யிலேதான், நந்தகோபால் நன்
கொடை நூறு ரூபாய்......இதிலே
என்ன அதிசயம்......மத்தவன்
கொடுத்தது பத்தும் அஞ்சும்,
பச்சை நோட்டு, யாருது?...போட்
டுட்டா போதுமா...ஏன் உனக்கே
தோணலியா...நூறு ரூபா கேட்டு
வாங்கறபோது புத்தி சுறுசுறுப்பா
இருக்குது...கொஞ்சமாவது நன்றி
விசுவாசம் இருந்தா, நம்ம பேருக்குக்
கீழே நம்ம வியாபார விலாசத்தைப்
போட்டிருப்பேயேல்லோ....மறதியா
உன் அச்சாபீஸ் பேரு இருக்குதே,
அதை மறந்தயா......போய்யா.;...
அடச்சே போ!......என்ன செய்ய
ணும்னு கேட்கறியா......ஏன் என்
படத்தை அட்டையிலே போட்டா
என்னவாம்......இருவது ஆகட்டும்
எழுவது ஆகட்டும், கேட்டா வீசி
எறியறேன்...நான் சொன்ன பிறகு
தானே......அய்யோவ்! என் படத்
தைப் போடறதாலே எனக்குப்
பெரிய விளம்பரம்னு எண்ணிக்
கொள்ளாதே.........ஏதோ கடவுள்
கிருபையாலே நந்தகோபால்னு
சொன்னு நாலுபேருக்குத்

தெரியும்.........போதும்யா இந்த உபசாரம்......படத்தைப் போட்டா, அதைப் பத்துபேர் பார்த்து நாமும் நந்தகோபால்போல நல்லது செய்யணும், ஏழை எளியவங்களுக்கு உபகாரம் செய்யணும்னு நினைப்பாங்க, ஊருக்கு அதனாலே நல்லதுவரும்...அதுக்காகச் சொல்றதுய்யா......இருவது இதுக்குன்னு தனியாகொடுக்க, நான் ஒண்ணும் இளித்த வாயனில்லா...ஆமாம்...... பொதுச் செலவிலே போடு...பணம் கொடுத்து என்படத்தைப் போட்டுக்கொள்ள எனக்கு இஷ்டமில்லே ...சொன்னேன், முடிந்தா செய்யி... மறுபடியும் ஒரு காரியத்துக்கு வரணும் என்கிற எண்ணமிருந்தா செய்யி...ரூபா நூறு கவனமிருக்கட்டும்......அய்யோவ் பாலுமொதலி, ஏன்யா தர்ம ஆஸ்பத்திரின்னு புரியறபடி போட்டா என்ன...இலவச மருத்துவமனை...என்ன இழவு இது ...என்னது? நல்ல தமிழா,...இதுவா ...சரி......எத்தனை ஆயிரம் போட்டிருக்கே...தூ! இவ்வளவுதானு...சரி, நல்ல காரியம் நடக்குதுன்னு நாலு பேருக்குத் தெரியணுமேல்லோ...... ஆமான்னு இழுத்தால் போதுமா? அடுத்த வெள்ளிக்கு......ஆமாய்யா வெள்ளிக்கிழமைதான், நம்ம அமிர்தாலயத்திலே...ஆமாய்யா நம்மபுது கைத்தறி ஜவுளி ஸ்டோர்தான்...... பெரிய கடைத்தெருதான்......அந்த அமிர்தாலயம் திறப்புவிழா...ஆமா ......மந்திரிதான் திறப்புவிழா...... ஆமாய்யா, மந்திரிதான்...வர்ராரு... ஏன் வரமாட்டாருன்னு நினைப்பா... நான் யாருகட்சி? மந்திரி கட்சின்னு தெரியாதா......சரி, சரி, அந்தத் திறப்புவிழாவின்போது, பத்து எடுத்துகிட்டு வா.....ரூபாயா?...... பைத்யமாய்யா உனக்கு, தர்ம ஆஸ்பத்திரியைப் பத்தின புத்தகம்...... பத்து...ஆமா, மந்திரியிடம் கொடுக்கலாம்......மாலையா......நீ என்ன மாலையா வாங்கிக் கொண்டுவரப் போறே......உதிர்ந்து போனதா கொண்டாந்து என் பேரைக் கெடுத்துவிடப் போறே...விலையைப் பத்திக் கவனிக்காமப்படிக்கு, நல்ல ரோஜா மாலே கொண்டு வா...... போடு! போடு! நீயே போடு!...... அய்யோவ்! பாலுமொதலி! செண்டு! செண்டு! மறந்துவிடப் போறே... மாலே......செண்டு......திறப்பு விழா நோடீசா?...அது என் தம்பி, எங்கேயோ கொடுத்துட்டான் அச்சடிக்க...நான் என்னய்யா செய்ய... உன் அச்சாபீஸ்பேரு விளங்கணும், ஒத்துக்கொள்றேன்...இப்ப வேறே என்ன செய்ய முடியும்......வேணுமானு ஒண்ணுசெய்யி, ஒருவரவேற்பு பத்திரம் அடிச்சிக் கொடுத்தூடு... என்னய்யா என்னமோ நான் ஆர்டர் கொடுக்கறது மாதிரியா, எத்தனை ஆயிரம் அச்சடிக்கன்னு என்னைக் கேட்கறே...உன்னுடைய சக்திக்குத் தகுந்தபடி செய்யி...ஆமா மாம்......உன்னுடைய அச்சாபீஸ் விளம்பரத்துக்குத்தான்......அய்யோவ்! பாலு மொதலி! மந்திரி கையிலே கொடுக்கறது, நல்லபடி இருக்கட்டும் வரவேற்பு......பேரு கெட்டுவிடப்போகுது, பார்த்துச் செய்யி...அய்யோவ்! பாலுமொதலி நந்தகோபால்னு மொட்டையா அச்சடித்துவிடாதே, விலாசம் முழுவதும்....மறந்துவிடுவய்யேன்னுதான் சொன்னேன்...இதுக்கே நீ எனக்குத் தரலாம்யா, உன்னுடைய வருமானத்திலே பாதியை...உனக்குப் பேராசை, எவ்வளவு வருமானம் இருந்தாலும் போதாது...தெரியும் தெரியும்......அய்யோவ்! பாலு! கடைசீ பக்கத்திலே ... 'ஆமாய்யா உன்னுடை தர்ம ஆஸ்பத்திரி புத்தகத்திலேதான், கடைசீ பக்கத்திலே குறித்துக் கொள்ளய்யா...எழுதிக் கொள்றயா... விளம்பரம்தான்யா... முழுபக்கம்தான் ... கலப்பட எண்ணெயால் கடுப்பு வியாதி! உஷார்! உஷார்! எழுதினயா, உஷார்! உஷார்!......கடுப்பு வியாதிக்கு கைகண்ட மருந்து கருந்தங்கச் சூரணம்...ஆச்சா...மூன்றே வேளையில் குணம் நிச்சயம்...சோல் ஏஜண்ட் நவநீதகிருஷ்ணன் அண் கோ...... ஆமா தம்பிதான்......நம்ம நவநீதன்தான்...விளம்பரசார்ஜா...ஆகட்டும் வாங்கித் தரமாட்டேனு.....நல்லபடி இருக்கட்டும், விளம்பரம்...சரி வர்ரேன்...வணக்கம்...

ஜவுளிக்கடை, பலசரக்கு மண்டி, காண்ட்ராக், கமிஷன் ஏஜண்ட், போன்ற பல்வேறு வருவாய்த் துறைகளைப் பெற்று, பெரிய புள்ளியாக விளங்கும் சீமான் நந்தகோபால், ஒருநாள் தமது மாளிகை 'டெலிபோனில்' பேசியவை மேலே தரப்பட்டுள்ளன.

இந்தப் பேச்சு காட்டும் வரவு-செலவு பற்றிச் சிந்தித்துப் பாருங்கள் — செல்வபுரியின் ஒரு பகுதி புரியும். மறந்துவிடாதீர்கள்— மூன்றுமுறை டெலிபோன் செய்ததற்கான கட்டணத்தை, செலவுக் கணக்கில் சேர்க்க வேண்டும். நீங்கள் சேர்க்கத் தவறினல், நந்தகோபாலர், சும்மாவிடமாட்டார்!!

## விற்பனையாளர்களுக்கு

மணியார்டர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி" அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

பெரிய கொள்ளைக்காரர்கள், புரட்சிக்காரர்கள், சர்க்காரைக் கவிழ்ப்பவர்கள், இப்படிப்பட்டவர்கள் பிடிபட்டால், அவர்களை, ஒரே இடத்தில், சிறை வைப்பது இல்லை. பிரித்துப் பிரித்து, தனித்தனியாகச் சிறை வைப்பார்கள். இது போலீஸ் முறை. வழக்குகளுக்குத் தேவையான துப்புகள் பெறவும், சாட்சிகள் சிதையாமல் பார்த்துக்கொள்ளவும், இந்த முறை புகுத்தப்பட்டிருக்கவேண்டும்.

நாங்கள் ஐவர்தானே கிடைத்தோம்—எனவே, அந்த முறையை; மெத்தச் சிரமப்பட்டு எங்கள் விஷயத்தில், உயர்தரப் போலீஸ் அதிகாரிகள் கையாண்டனர். கேலிக்கூத்தல்லவா என்பீர்கள். நடந்ததே!!

பொன்னுவேல், பட்டப்படிப்புப்பெற்ற இளைஞர்; பொறுப்புமிக்க குடும்பத்தினர். அவர்மீது, கலகம், அடிதடி, முதலிய எந்தவிதமான புகாரும் சுமத்தப்பட்டதுகூட இல்லை. என்னோடு, விலைவாசிக் குறைப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டு, வேலூர் சிறையில் இருந்தவர்.

வெங்கா என்ற இளைஞர், நிலபுலத்துக்கு உரியவர், அமைதியானவர், அச்சிறுபாக்கத்தை அடுத்த சீதாபுரம் என்ற சிற்றூரில், மதிப்பான குடும்பத்தில் பிறந்தவர். பார்த்தாலே புரிந்துவிடும், படபடப்பான நடவடிக்கையில் கூட அவர் ஈடுபட மாட்டார்—ஈடுபடக் கூடியவர் அல்ல என்பது.

பார்த்தசாரதி—தாத்தாவானவர்—கழகக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டவர்—கழகவரலாறு தொகுத்து அளித்தவர்—வில்லிவாக்கத்தில் வீடும் வாசலும் உடையவர். பொறுப்பற்ற செயலில் ஈடுபடக்கூடியவர் அல்ல.

சுந்தரம்—சென்னையில், தையற்கலையில் சிறப்பிடம் பெற்று விளங்குபவர்—தையற்கலை பற்றி பல நூற்களை வெளியிட்டு, புகழ் ஈட்டியவர். எப்போதும் இதழோரத்தில் ஓர்புன்னகை தவழும்; அவர்மீது எந்தவிதமான கலகம், அடிதடிபோன்ற வழக்குகளும் கட்டிவிடப்பட்டதுகூட இல்லை.

என்னை, நான் விளக்கத்தேவை இல்லை. அமைதியான அரசியலை நாடுபவன்.

இந்த ஐந்துபேர்களை, வெடிகுண்டு தயாரித்தவர்கள், விடிவதற்குள் எட்டு ஊர்களைக்கொளுத்தத் திட்டமிட்டவர்கள், அரிவாள் தீட்டினவர்கள், அடித்துவிரட்டுபவர்கள் போன்றவர்களை நடத்துவதுபோல, ஒன்றுக்கைது செய்து, ஒவ்வொருவரை ஒவ்வொரு பக்கமாக இழுத்துக்கொண்டு போயா, கொட்டடியில் போட்டு அடைப்பது! தேவைதானு? முறைதானு?

நான் அடையாறு போலீஸ் கொட்டடியில்; பொன்னேரியில் சுந்தரம்; பூவிருந்தவல்லியில் பொன்னுவேல்; காஞ்சிபுரத்தில் பார்த்தசாரதி; செங்கற்பட்டில் வெங்கா!!

அவ்வளவு சர்வஜாக்ரதையாக, வேலை செய்கிறதாம், போலீஸ் இலாகா!!

நாங்கள் ஐவரும் ஒரே இடத்தில் வைக்கப்பட்டால் என்ன விபரீதம் ஏற்பட்டுவிடும்; உடனே கூடிப்பேசி, 17-ந்தேதி எப்படித் தப்பித்துக் கொண்டு வெளியே சென்று, சட்டத்தைக் கொளுத்துவது என்று திட்டம் தீட்டிச் செயல் பட்டுவிடுவோமா! அல்லது எங்கள் ஐவரையும் ஒருசேர, ஒரு இடத்தில் கண்டால், கண்டவர்கள், கண்களில் கனல் கக்கக் கிளம்பி, கலாம் விளைவித்து, சர்க்காருக்குத் தொல்லைகொடுத்துவிடுவார்களா! என்ன எண்ணிக்கொண்டு, என்ன காரணத்துக்காக, இந்த ஐவரையும், பிரிததுப் பிரித்துத் தனி இடத்தில், காவலில் வைக்கவேண்டும்!! தெரிந்தால் தெரிவியுங்கள்; எனக்கு இதிலே தெளிவோ, திட்டமோ இருப்பதாகத் தெரியவில்லை. என்னைப் பிறகு அடைத்து வைத்த சைதாப்பேட்டை சப்ஜெயிலில் கள்ளநோட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட 8 பேர், ஒரே இடத்தில்தான் இருந்தார்கள்! அத்தகைய விவகாரத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை விட, 'ஜாக்ரதை'யான ஏற்பாடுகள், வெளிப்படையாக, இன்ன காரியத்தை, இன்ன இடத்தில், இந்த நேரத்தில், செய்யப்போகிறோம் என்று முன் கூட்டியே தெரிவித்துவிட்டு, ஒரு அறப்போர் நடத்த முன்வந்த எங்கள் விஷயத்திலா, கையாள்வது! ஒரு காரணம், அவசியம், பொருள், பொருத்தம், இருக்கவேண்டாமா!! இப்படி இயங்குகிறது ஒரு அரசு. இந்தவிதமாக நடத்தப்படுகிறார்கள், பொதுவாழ்க்கையில் பணி புரிபவர்கள்—அதிலும் சுயராஜ்ய காலத்தில்!!

அந்தந்த ஊர் போலீஸ் அல்லது சிறைக் கொட்டடியில் உள்ளவர்கள், என்ன எண்ணிக் கொள்வார்கள், என்ன பேசிக்கொள்வார்கள், இப்படி தனித்தனியே, கொண்டுவந்து அடைத்ததுபற்றி?

பெரிய பக்காத்திருடன்போல இருக்கிறது, அதனால்தான் இவனை இவனுடைய கூட்டாளிகளிடமிருந்து பிரித்துத் தனியாகக் கொண்டுவந்து அடைத்திருக்கிறார்கள், என்று பேசிக்கொள்வார்கள். இதிலே, போலீசுத் துறைக்குக் கிடைக்கும் கீர்த்தி என்னவோ, இலாபம் என்னவோ, சுவை என்னவோ, எனக்குப் புரியவில்லை.

அடையாறு போலீஸ் கொட்டடி போய்ச் சேருகிறவரையில் எனக்கு எங்கே போகிறோம் என்பது தெரியாது. அதிகாரியை நான் கேட்கவுமில்லை. இரண்டு நாள் கழித்துத்தான், மற்ற நால்வர் சென்ற இடங்களும் எனக்குத் தெரிய வந்தன.

அடையாறு போலீஸ் கொட்டடியும் எனக்கு முன்பே பழக்கமான இடம்தான்—1957-ல் ஒரு இரவு, நமது நண்பர்களுடன் அடைக்கப்பட்டிருந்தேன். என்னை அழைத்துக் கொண்டுவந்த துணைக் கமிஷனர் உத்திரவிட்டார், எனக்குச் சாப்பாடு கொண்டுவரச் சொல்லி. சாப்பாடு முடிகிறவரையில், மிக இயற்கையாகவே அனைவரும் பேசிக்கொண்டிருந்தனர். பிறகு துணைக் கமிஷனர் சென்றுவிட்டார். போலீஸ் நிலைய அதிகாரிகள், மெல்லிய குரலில் 'லாக்-அப்' என்றார்கள்.

பகல் 1 மணிக்கு! கைதி! லாக்-அப்பில்தானே போட்டாக வேண்டும். அதுதானே அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விதிமுறை! கைதி என்ருல் எல்லோரும் ஒன்று! அதிலே தராதரம் பார்க்கத் தேவையில்லையா! அரசியல் கிளர்ச்சி காரண மாகக் கைது செய்யப்பட்ட ஒருவரை, அறை யிலே போட்டுப் பூட்டிவைக்காவிட்டால் தப்பித் துக்கொண்டு ஓடியா போய்விடுவார்!—என்றெல் லாம் கேட்டார்கள்! பொதுமக்களின் பேச்சா, இன்று ஆளுகிறது! சட்டம், ஆள்கிறது, சட்டம்! அந்தச் சட்டம் சொல்கிறது, கைதியை லாக்-அப்பில் வை!—என்று. அதன்படி நடந்தாக வேண்டும் அதிகாரிகள், அதிகாரிகள் கண்க ளிலே ததும்பிய, பாசம், பயம், திகைப்பு, எல்லாம் எனக்குப் புரிந்தது. எத்தனையோ போலீஸ் கொட் டடிகள் இருக்க, இங்குதானு இவனை அழைத்துக் கொண்டுவரவேண்டும் — நமக்குச் சங்கடமாக இருக்கிறதே என்றுதான் அவர்கள் எண்ணிக் கொள்வார்கள். அவர்கள், சிறிதளவு அன்பு காட்ட எண்ணினுல், தீர்ந்தது, யார் என்ன கோள் மூட்டிவிடுவானே, தலைக்கு என்ன தீம்பு வந்துவிடுமோ என்ற பயம் அவர்களைப் பிய்த்துத் தின்கிறது.

'லாக்-அப்' செய்யப்பட்டேன்! கடப்பைக் கற்கள் பரப்பப்பட்ட சிறிய கொட்டடி. போலீஸ் நிலையமே 1957-ல் நான் பார்த்த அதே நிலையில் தான் இருக்கிறது—இரண்டு ஐந்தாண்டுத் திட்டங் களும் அதைத் தீண்டியதாகத் தெரியவில்லை. ஒழுக்கல்! இடநெருக்கடி!

லாக்-அப்பில், கீழே விரித்துக்கொள்ள என்ன கிடைக்கும்? ஒரு பழைய விரிப்பு! அதுவும், பாவம், யாரோ, கான்ஸ்டபிளுடையதாக இருக் கும். நான் கொண்டு போயிருந்த சால்வை தலை யணை ஆயிற்று. பிற்பகல் நாலு மணிக்குத்தான் விழித்துக்கொண்டேன், பிடிபடுவதற்கு முன்பு நாலைந்து இரவுகள் எனக்குச் சரியான தூக்கம் கிடையாது. எனவே, இடத்தின் இடர்ப்பாடு பற்றிய கவலையற்றுத் தூங்கிவிட்டேன். போலீஸ் அதிகாரிகள், என்ன எண்ணிக் கொண்டார் களோ தெரியவில்லை. பயலுக்குப் பழக்கம்! என்று எண்ணிக் கொண்டார்களோ—பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டார்களோ—இவனுக்கு ஏன் இந்த வேலை. இவன் படித்த படிப்புக்கு ஒழுங்காக எங்காவது வேலைக்குப் போயிருந்தால், இப்போது ரிடயராகி, பென்ஷன் கேட்டிருக்கலாம்; இப்படி லாக்-அப்பில் கிடக்கிருனே என்று பரிதாபப்பட்டார்களோ, தெரியாது.

தம்பி! நமக்கு இருப்பதைவிட இத்தகைய அதிகாரிகளுக்குச் சங்கடம் அதிகம் — அதனை உணர்ந்திருக்கிருயோ, இல்லையோ, தெரியவில்லை.

பொதுவாகவே, ஏற்பட்டுவிடும் உணர்ச்சி களை, பேச்சினுல், வெளியே கொட்டிவிட்டால் தான், மனதுக்கு ஒரு நிம்மதி—பெரிய பாரத்தைக் கீழே இறக்கி விட்டபோது ஏற்படும் நிம்மதி—உண் டாகும். உணர்ச்சிகளை வார்த்தைகளாக்கி வெளியே காட்ட முடியாமல், மனதுக்குள்ளேயே போட்டு, அடைத்து வைத்திருந்தால், மனம், சுமையினுலே பாதிக்கப்பட்டுவிடும். வேதனை அதிகமாகிவிடும்.

நாம், நமது உணர்ச்சிகளைப் பேசி வெளிப் படுத்துகிருேம்—பாரம் குறைகிறது—மனதுக்குச் சுமை இல்லை.

இந்த அதிகாரிகள் என்ன செய்வார்கள். நெஞ்சில் இருப்பதை நாவுக்குக் கொண்டுவர முடி யாது. தத்தளிக்கிருர்கள். என்னை மட்டுமா அவர்கள் 'லாக்-அப்' செய்தார்கள்? தங்களுக்கு இயற்கையாகத் தோன்றக்கூடிய பரிவு, பச்சா தாப உணர்ச்சி, எல்லாவற்றையும் சேர்த்துத் தான் 'லாக்-அப்' செய்துவிடுகிருர்கள்!!

இவ்விதமே செய்து செய்து, சில காலத்திற் குப் பிறகு அத்தகையவர்கள், உணர்ச்சிகள் எளிதிலே எழமுடியாத 'மனம்' பெற்றுவிடுகின் றனர்.

போலீஸ் அதிகாரிகள், 'பிடிபட்ட'வர்கள், தங் களுக்குத் தொல்லை கொடுத்தவர்கள், ஆணைக்கு அடங்க மறுத்தவர்கள், வம்புதும்பு பேசுபவர்கள் என்ற வகையினராக இருந்தாலாவது, கோபம் கொண்டு, அமுல் நடத்த வசதி ஏற்படும். "பயல் பத்து நாட்களாகச் சிக்காமல் ஏமாற்றிக்கொண் டிருந்தான். பிடிக்கச் சென்ற கான்ஸ்டபிளுடைய கையைக் கடித்துவிட்டான் எவனும் தனக்கு நிகர் இல்லை என்ற விதமாகப் பேசுகிருன்."— என்று கூறி, கோபத்தைக் காட்டலாம். என் போன்ருரிடம், அவர்களுக்குக் கோபம் ஏற்பட ஒரு காரணமும் கிடையாதே! ஆகவே, கோப உணர்ச்சி எழ வழி இல்லை, பரிவு பச்சாதாப உணர்ச்சியை வெளிப்படுத்த முடிவதில்லை. மெத்தத் தத்தளிக்கிருர்கள்.

சிறிதளவு ஏமாந்தால் மேலே பாய்ந்து பிய்த்து எறிந்துவிடும் கொடிய புலி, சிறுத்தை, சிங்கம் ஆகியவற்றைக் கூண்டிலே நிறுத்தி வைத்து, சர்க்கஸ்காரர் கையிலே சவுக்கும், துப்பாக்கியும் வைத்துக்கொண்டு, மிரட்டுவதை யும், அந்த மிருகங்கள், உறுமுவதையும், உடனடி யாக அடங்க மறுப்பதையும், இரண்டொரு அடி கள் விழுந்த பிறகே, அடங்குவதையும் பார்க்கும் போது, காட்சி களிப்பளிப்பதாகக்கூட இருக் கிறது. ஆனல் அதே சர்க்கஸ்காரர், அதே கூண்டிலே, ஆடு, முயல், அணில், இவைகளைக் கொண்டு வந்து நிறுத்தி, சவுக்கும் துப்பாக்கியும் கரத்தில் வைத்துக்கொண்டு, மிரட்டினுல், பார்ப் பதற்கு எப்படி இருக்கும்! அரசியல் பிரச்சினைகள் காரணமாகக் கிளர்ச்சிகளை மேற்கொள்பவர்களை, இன்று போலீஸ் துறையினரிடம் ஒப்படைப்பது, எனக்கு, ஆடு, முயல், அணில் போன்றவைகளைச் சிறுத்தை, புலி, சிங்கம் ஆகியவற்றை அடக்கி ஆளும் வேலை தெரிந்த சர்க்கஸ்காரரிடம் ஒப் படைப்பது போன்ற வேடிக்கையாகவே தோன்று கிறது.

(தொடரும்)

# பிடிபட்டான்?

அட்டைப் படம்
அறிவிப்பது

C. N. A.

பிடிபட்டான் அதிகாரி இலஞ்சம்
பெற்றான் என்பதால்; நின்றான்
நீதிமுன்.

ஐயா, நான் பெற்றதெல்லாம்
இந்த அலங்கார உடைகட்கும்
ஆடம்பர ஆட்டந் தனக்கும்
மெய்யாய்த் தேவைப்படும் பொருளே!
மிச்சம் பிடித்திடவில்லை ஓர் இலட்சம்.

கொடுத்தவர் கோலாகலச் சீமான்
கோட்டைக் கோமான்களின் நண்பருமாவார்
நீட்டினார் சில பச்சை நோட்டு
நெருக்கடி நிலையினால் புத்தியுங் கெட்டு
பெற்றுக் கொண்டேன் கொஞ்சக் காசு
பிள்ளைகுட்டிகள் மேலாணை பெரியதொகைஅல்ல
தந்த அந்தத் தனவந்தர் என்போல்
ஏழெட்டுப் பேர்களை மயக்குவார் விழியால்.

"அஞ்சி அஞ்சிச் சாகவேண்டாம்
அமைச்சர்கள் இன்னின்னார் என் நண்பர்"
என்றார்.
"அவர்களின் தேர்தல் வெற்றிக்கே
ஆயிரம் அல்ல, பல இலட்சம் தருபவன்
நான்.
என்னை நம்பிடு நண்பா! ஏனோ உனக்கு
வீண் சந்தேகந்தானே!!
எடுத்துக் கொள்; இது சகஜமென்றார்"
ஏமாளி ஆகினேன்; இளித்துங் கிடந்தேன்;
என்பிழை உணர்கின்றேன்; மெய்யாய்.

இந்நிலை நான்பெற எவர்
காரணமோ
அன்னாரைக் கூண்டிலே ஏற்றி
அறிகுவீர் பற்பல சூழ்ச்சிகள்தமை
மெத்தப் பெரியவர் என்போர்
செய்திடும் தகிடுதத்தம் காண்பீர்
உண்மையைக் கண்டிடுவீரே,
என் உரையினை நம்புவீர், நீதிக்
குழைப்போரே!

பெற்றேன் கொஞ்சத்தை இலஞ்சமாக; அதனை
மறுத்திடவில்லை, ஒப்புக்கொள்கின்றேன்
பிழையது அதனையும் இனிநான்
இல்லை என்பேனோ?
முழு உண்மைதனை மட்டும் காண

முனைந்திடுவீர் ஐயா! முறையிடுகின்றேன்.
வெறும் பலிஆடு தேடுதல் நன்றோ?

இலஞ்சம் எனக்குத் தந்தவர் எவரே?
இருளப்பன் அல்ல! அவன் வெறும்
அம்பு'!
எய்தவன் ஏழெட்டு இலட்சம்
கொண்ட,
இருப்பூரான்! இவன், அவன் எடுபிடி
அறிவீர்!
கொடுத்தவன் அவன் என்பதற்கே
நான் கொண்டு வந்திடத் தெய்வமும்
உண்டோ?

உள்ளத்தைத் திறந்துரைக்கின்றேன்
உண்மையாய் இலஞ்சத்தைக்
கொடுத்தவன் இன்று,
உலவுகின்றான் உயர்வுடனே,
ஊராள்வோர் மத்தியில், உற்சாகத்துடனே.
பிடித்திடுவீர் அந்தப் பெரும்புள்ளிதனை
பிழைத்திடும் நீதியும் நேர்மையும்
இனிமேல்!
பேர் கண்டு மிரண்டிட வேண்டாம்.

என்னுடன் பள்ளியில் படித்தான்
ஏகாம்பரம் எனும் ஏ. அம்பரந்தான்!
எலுமிச்சம் பழத் தோட்டம் உண்டு
இவனப்பன் அதனாலே பிழைத்து
வந்தான்!

எப்படியோ சில ஆண்டில்
இவன் ஏழெட்டு இலட்சத்தைப்
பெற்றானே! விந்தை!!
சுற்றிவந்தான் சொகுசாக.
"சோணாசலம்! என்னை மறந்தாயோ"
என்றான
ஏகாம்பரந்தானே! என்னப்பா
சேதி!
எப்படி வாழ்க்கை எனக்கேட்
கின்றேன், நானும்
மாதம் முந்நூறு சம்பளம் பெற்றிடும்
நிலையில!

அளக்கின்றான் அவனியின்
அதிசயம் எல்லாம்
வாய்பிளக்கின்றேன்! என்செய்வேன்

அவன் நிலை கண்டேன்!!
கவனித்துக்கொள்ளப்பா! என்றேன்
சூது கபடு துளியுமின்றி.
கண்சிமிட்டிச் சிரித்திட்டான்,
கனவானான ஏகாம்பரந்தானும்.

என்னோடு படித்தவன்! என்றேன்
துணைவியிடமே
எப்படிப் பிழைத்திடும் வழி
கண்டார்; காணீர்!
இப்படி இருக்கிறோம், இதில்
என்ன இலாபம்?
அப்படிப்பட்டாரை அடுத்து
நீர் தானும்
அறிந்திடும் பொருள் ஈட்டிடும்
வழிதன்னை என்றாள்.


"பற்பல திட்டங்கள் பாங்காகத்
தெரியும்
செப்பிடுகின்றேன், நல்ல சமயமும்
வரட்டும்
இடையில் எத்தனை கஷ்டம்
உனக்கு வந்தாலும்
இருக்கின்றான் இந்த
ஏகாம்பரந்தானும்"
என இயம்பிய மொழிகேட்டுப்
பூரித்துப் போனேன்
ஏதேதோ மயக்கினான்
ஏமாந்து போனேன்.

சிற்சில தகவல்கள் சேகரித்திடுவாய்
செய்தொழில் தனக்கவை
வேண்டும் என்றானே.
எப்படி மனம் ஒப்பும் எனக்
கைபிசைந்தேன் நான்.
"இப்படிக் கோழையாய் ஏன்
சாகின்றாய், நீ!

எந்த ஆபத்தும் உனை
அண்டாது அணுகாது; காப்பேன்!
எந்தன் ஆளிடம் தந்தனுப்புறேன்
பணமும்
சிந்தையில் குழப்பம் சேர்த்திடாமல்
நீ
செய்திடு உதவியும்! செய்வேன்
உதவி நான்!!
முந்தையர் சொத்தது மூழ்குது
கடனில்
என்று அன்று நீ ஏங்கினாய்
அறிவேன்.

அந்தச் சொத்தினை அளிப்பேன்
உனக்கே நான்
ஆகட்டும் வேலையைக் கவனி
இனி'' என்றான்.
பிழை செய்துவிட்டேன்; உணர்கின்றேன், ஐயா!
ஆனால் நீர் பிடித்திட்ட ஆள்,
அம்பு!
பிடித்திடுவீர், ஏகாம்பரத்தை!!

இந்தவிதம் உரைத்த இவன்
பேச்சைக் கேட்டு
இலஞ்சம் இவன் பெற்றிட்டான்
பிடிபட்டான், இதற்கு
ஆண்டு ஆறு தண்டனை
அளித்திட்டேன்,
இவனும் வேறு சில
கூறுகின்றான், அதற்கு,
வேண்டும் ஆதாரம்; இல்லை;
எனவே ஏதும் செய்வதற்கில்லை,
இழுத்துச் சென்றிடுவீர் இவனை
சிறைக்கூடம் என்றார்;
என் செய்வான், சிறை
சென்றான், மனமும் வெதும்பி.



இன்ன காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், (உரிமையாளர்) சி. என்.ஏ. இளங்கோவனால
அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.